TAMIL

(தமிழ்)

(304)

காலம் : **3** மணி | மதிப்பெண்கள் : **100**

அறிவிப்பு : (1) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(2) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(3) பகுதி "ஆ" வில் இரண்டு விருப்பப்பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப்பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(4) வினாவிற்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி அ

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ஓரிரு சொற்களில் விடை தருக. **17×1=17**

1 இறைவன் யாருக்குக் களிப்பருள்வான் ?

2 தலைகள் எதைப் பார்த்தபடி நடந்ததாக சுகந்தி சுப்பிரமணியம் தன் கவிதையில் குறிப்பிடுகின்றார் ?

3 இதயத் துடிப்பு அதிகரிக்காததன் காரணமாக இன்குலாப் கூறுவது யாது ?

4 அகடு - பொருள் கூறுக.

5 பிரபந்தம் என்ற சொல்லின் பொருள் யாது ?

6 இந்தப் புண்ணிய நாட்டின் சிறப்பாகப் பாரதியார் குறிப்பிடுவது யாது ?

7 லெமூரியா எங்கே இருந்தது ?

8 சிரிப்போம் சிந்தித்தோம் கதையில் காவலன் பூனைக்கு எந்தக் கிண்ணத்தில் பாலை வைத்தான் ?

9 டால்ஃபின் மீன் விளையாட்டுப் பூங்கா அமைந்துள்ள இடம் எது ?

10 பிள்ளைத் தமிழ் பாடுவதற்குரிய பருவங்கள் எத்தனை ?

11 ஏன் முடியாது ? நாடகத்தில் பேராசிரியர் எதனை மூலதனம் என்கிறார் ?

12 அவை, இவை என்பவை ..... பாலாகும்.

13 கடி - இலக்கணக் குறிப்பு தருக.

14 காடும் காடு சார்ந்த பகுதிகள் ..... எனப்படும்.

15 காலம் மறைந்து வருவது ..... ஆகும்.

16 வேண்டியுள்ளது என்பதில் வந்துள்ள உடம்படுமெய் ..... ஆகும்.

17 COMPUTER DOWN LOADING - இச் சொல்லின் தமிழ்ச்சொல்லை எழுதுக.

18 (அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. **3×4=12**

(1) எங்கள் தாய் இறைஞ்சுவம் என்று பாரதி கூறக் காரணம் என்ன ?

(2) சிற்றிலக்கியங்கள் ஐந்தினை எழுதுக.

(3) அகிம்சைப் போர் ஏன் புதுமையானது ?

(4) கல்வியின் சிறப்புகளாக பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறுவன யாவை ?

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. **3×4=12**

(1) காவடிச் சிந்து எத் தெய்வ வழிபாட்டின் அடிப்படையில் தோன்றியது ?

(2) பதினெண்மேல் கணக்கு நூல்களின் பெயர்களை எழுதுக.

(3) கதவு சிறுகதையின் மையக் கருத்து யாது ?

(4) செம்மொழியின் பண்புகள் நான்கினை எழுதுக.

(இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. **2×4=8**

(1) சிறுகதையின் உறுப்புகள் யாவை ?

(2) முத்துலெட்சுமி அம்மையார் தோற்றுவித்த அமைப்புகள் யாவை ?

(3) நற்றிணை கூறும் பண்பாட்டின் ஆறு நிலைகளைக் கூறுக ?

19 குறிப்பு : ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2×6=12

(1) கோப்பெருந்தேவி கண்ட தீக்கனாவை விளக்குக.

(2) வலியறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளை விளக்குக.

(3) பாரத நாட்டின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(4) ஆற்றில் வெள்ளம் வருவதற்கான அறிகுறிகளாக முக்கூடற்பள்ளு குறிப்பிடுவன யாவை ?

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3×6=18

(1) இசைக் கலையின் பல்வேறு நிலைகளை எழுதுக.

(2) கோயில்கள் வளர்க்கும் மனங்கவர் கலைகள் பற்றிக் கூறுக.

(3) சென்னை மாநகரில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை விவரிக்க.

(4) எலிகளை ஒழிக்க அமைச்சர்கள் சொன்ன வெவ்வேறு யோசனைகள் யாவை ?

(5) இலக்கிய வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து எழுதுக.

(6) பழந்தமிழரின் நகரமைப்பு கட்டடங்கள் பற்றி விளக்குக.

(இ) ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க. 1×6=6

(1) வ.உ. சிதம்பரனாரின் விடுதலைப் போராட்டங்கள் குறித்தும் அவரது இலக்கியப் படைப்புகள் குறித்தும் எழுதுக.

(2) களவு போன கனவு கதையைச் சுருக்கி எழுதுக.

பகுதி ஆ

விருப்பப் பாடம் 1 இணையமும் தமிழும் 5×1=5

20 இ-மெயில் ஐடி என்பது .....

(அ) இன்பர்மேஷன் (ஆ) மின்னஞ்சல் முகவரி

(இ) அடையாள அட்டை (ஈ) ப்ரௌசர்

21 விடுதலைக்கு முன்பு இந்தியாவில் பன்மொழிப் பாடல்களைக் கேட்க உதவிய வானொலி .....

22 Out bound call என்றால் என்ன ?

23 மின்னஞ்சலை ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்கு அனுப்ப உதவும் பகுதி எது ?

24 தமிழைப் பயன்படுத்தக் கணினியில் நிறுவ வேண்டிய மென்பொருள்கள் எவை ?

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க. 1×4=4

25 எழுத்துருவின் பயன் யாது ?

26 முகவருக்கு வேண்டிய பேச்சுத் திறன் எத்தகையது ?

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க. 1×6=6

27 இணையத்தின் பயன்கள் யாவை ?

28 தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து எழுதுக.

விருப்பப் பாடம் 2 மேலாண்மை இயலும் தமிழும் 5×1=5

20 அமைப்புச் செய்தல் என்றால் என்ன ?

21 மனிதவள நிர்வாகத்தின் முக்கியப் பணிகள் யாவை ?

22 கடிதத்தின் பயன்கள் இரண்டனைச் சுட்டுக.

23 தொகுக்கும் திறன் பொருள் கூறுக ?

24 அசைவு - என்றால் என்ன ?

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க. 1×4=4

25 நிகழ்வுக் குறிப்பின் பயன்கள் என்ன ?

26 கவனித்தல் தொடர்பை விவரி ?

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவுக்கு விடையளிக்க. 1×6=6

27 தொழில் நுட்ப மேலாண்மையின் பணிகள் யாவை ?

28 தொகுக்கும் திறனின் செயல்பாடுகளை விளக்கியுரைக்க ?